ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ හිමිකම ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

08.08.2018 / 0830 - 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**கவனிக்க:**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** சக்கரபந்தம், பந்ததானம் என்ற சிறப்பு வாசிப்பு முறைகளைக் கொண்டுள்ள வாத்தியம்
(1) வீணை (2) வயலின் (3) கோட்டு வாத்தியம்
(4) நாதஸ்வரம் (5) புல்லாங்குழல்

**2.** சுத்த மத்யமத்தை அன்னியஸ்வரமாகக் கொண்ட இராகம்
(1) கமாஸ் (2) பிலஹரி (3) சாரங்கா
(4) அடாணா (5) முகாரி

**3.** இரண்டு களையாகத் தாளம் போட்டுப் பாடப்படும் உருப்படி
(1) மத்யமகால கிருதி (2) சௌககால கிருதி (3) திருப்புகழ்
(4) தரு (5) கீர்த்தனை

**4.** பல்லவி பாடும் முறையில் இடம்பெறும் அம்சங்கள் முறையே
(1) இராகம், தானம், பல்லவி, கற்பனாஸ்வரம், நிரவல்
(2) இராகம், பல்லவி, தானம், நிரவல், கற்பனாஸ்வரம்
(3) பல்லவி, இராகம், தானம், நிரவல், கற்பனாஸ்வரம்
(4) இராகம், தானம், பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம்
(5) பல்லவி, நிரவல், இராகம், தானம், கற்பனாஸ்வரம்

**5.** ஸ, ரி, கு, ம, ப, தி, நி என்னும் ஸ்வர சங்கேத அட்சரங்கள் குறிக்கும் ராகம்
(1) கரஹரப்ரியா (2) தீரசங்கராபரணம் (3) மேசகல்யாணி
(4) வாசஸ்பதி (5) ஹரிகாம்போஜி

**6.** அஸாவேரி இராகம் ஓர்/ஒரு
(1) ஏகஸ்வரவக்ர இராகம் (2) த்விஸ்வரவக்ர இராகம் (3) உபயவக்ர இராகம்
(4) சதுஸ்வரவக்ர இராகம் (5) த்ரிஸ்வரவக்ர இராகம்

**7.** பின்வருவனவற்றுள் அநிபந்த வகையைச் சேர்ந்தவை யாவை?
(1) இராக ஆலாபனை, தானம் (2) நிரவல், கற்பனாஸ்வரம் (3) தானம், நிரவல்
(4) இராக ஆலாபனை, நிரவல் (5) தானம், கற்பனாஸ்வரம்

**8.** சிட்டைஸ்வரத்திற்கு ஸாகித்தியம் அமைக்கப்பட்டிருக்கும் அணி
(1) சொற்கட்டுஸ்வரம் (2) ஸ்வர ஸாகித்தியம் (3) சங்கதி
(4) யமகம் (5) மத்யமகால ஸாகித்தியம்

**9.** ஹாஸ்ய நாடகமாகிய 'La Finta Giardini era' என்னும் கேய நாடகத்தை எழுதியவர்
(1) பீத்தோவன் (2) பாக் (3) மொஸாட் (4) கொட்லொப் நீவ் (5) லியோபோல்ட்

**10.** மேலைத்தேய இசையில் பயன்படுத்தப்படும் பிரதான துளை வாத்தியங்கள்
(1) நாதஸ்வரம், சக்ஸபோன் (2) சக்ஸபோன், கிளாரினட்
(3) முகர்சிங், கிளாரினட் (4) ஷெனாய், மெலோடிக்கா
(5) மெண்டலின், மகுடி

**11.** கடம் வாசித்துப் பிரபல்யம் அடைந்த இசைக் கலைஞர்
(1) விநாயகராம் (2) பாலக்காடு மணி
(3) அம்மாபேட்டை பக்கரி (4) வலங்கைமான் சண்முகசுந்தரம்
(5) நாராயணசாமி அப்பா

**12.** நாட்டைக்குறிஞ்சி இராகத்தின் ஆரோகணம், அவரோகணம் முறையே
(1) ஸரிகமதநிஸ, ஸநிதமகரிஸ (2) ஸரிகமநிதநிபதநிஸ, ஸ்நிதமகமபகரிஸ
(3) ஸகமபஸ, ஸ்நிதமகரிஸ (4) ஸரிகமநிதநிஸ, ஸநிதபமகரிஸ
(5) ஸகமதநிஸ, ஸ்நிதமகரிஸ

**13.** கீர்த்தனை ஒன்றைப் பாடும்போது பொருத்தமான இடத்தில் அதன் இராகத்தில் அமைந்த ஸ்வரங்களை மனோதர்மமாகப் பாடுவது
(1) சிட்டைஸ்வரம் (2) நிரவல் (3) முத்தாயிஸ்வரம்
(4) கற்பனாஸ்வரம் (5) தானம்

**14.** த்விஜாவந்தி இராகத்தைப் பாடும்போது அதற்கு ஒப்பான சாயலையுடைய இராகங்கள்
(1) ஸஹானா, பெஹாக், கேதாரகௌள
(2) கேதாரகௌள, காம்போஜி, தோடி
(3) ஸஹானா, கேதாரகௌள, யதுகுலகாம்போதி
(4) சாமா, ஸுருட்டி, காம்போதி
(5) ஸஹானா, மத்யமாவதி, கேதாரகௌள

**15.** பின்வருவனவற்றுள் திருநாவுக்கரசு நாயனாரது தேவாரங்களில் இடம்பெறும் பாவின அமைப்புகள்
(1) திருநேரிசை, திருத்தாண்டகம்
(2) திருக்குறுந்தொகை, திருப்பாவை
(3) திருவிருத்தம், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
(4) திருநேரிசை, திருவெம்பாவை
(5) திருச்சதகம், திருத்தாண்டகம்

**16.** நாட்டிய நிகழ்வில் 7ஆவது இடத்தை வகிப்பதும் இசைக் கச்சேரிகளில் இறுதியில் இடம்பெறுவதுமான உருப்படி
(1) பதவர்ணம் (2) இராகமாலிகை (3) பதம் (4) தில்லானா (5) கீர்த்தனை

**17.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - தனக்கென ஒரு தனியிடம் இல்லாது வேறு ஸ்வரத்தின் ஸ்தானத்தில் ஒலிக்கும்.
B - இது சேனாதிபதிக்குச் சமனான ஸ்வரமாகும்.
C - இரு சுருதி இடைவெளிகளைக் கொண்டிருக்கும்.
D - பகை ஸ்வரம் எனப்படும்.
மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் விவாதி ஸ்வரம் பற்றிய சரியான கூற்றுகள்
(1) A, B ஆகியன (2) A, C ஆகியன (3) A, D ஆகியன (4) B, C ஆகியன (5) B, D ஆகியன

**18.** மத்யமாவதி இராகம் ஒரு
(1) திவிதீய கனபஞ்சகராகம் (2) சுத்தராகம் (3) சாயாலகராகம்
(4) கனபஞ்சகராகம் (5) சங்கீர்ணராகம்

**19.** பின்வருவனவற்றுள் ஆக்கியவர் விபரம், அறிமுகம், பொருளடக்கம், தலைப்புடனான தொடர்பு, படங்கள் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாடு
(1) சிறுவர் பாடலுக்கு இசையமைத்தல் (2) இசை நாடக ஆக்கம்
(3) வெளிக்களப் புத்தக ஆக்கம் (4) பல்லிய நிகழ்ச்சித் தயாரிப்பு
(5) வில்லுப்பாட்டுக் குழுப் பயிற்சி

**20.** கோட்டு வாத்தியத்தில் தேர்ச்சி பெற்று முதன்முறையாக தரமான இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர்
(1) பூதலூர் கிருஷ்ணமூர்த்தி (2) சீனிவாசராவ் (3) சீதாராமய்யர்
(4) பழனி கிருஷ்ணய்யர் (5) காரைக்குடி சாம்பசிவ ஐயர்

**21.** "முருகா உன்மேல்" என்னும் சண்முகப்ரியா இராக ஆதிதாள வர்ணத்தில் "பாபத - நீத - பத - நிஸ்ரி - ஸ்" என்ற ஸ்வரக் கோர்வைக்குரிய ஸாகித்தியம்
(1) நீயே எனது பதி (2) மோகமாகினேன் (3) மோடி செய்தால்
(4) அன்போடின்பே பெருக (5) அருகாயிருந்தே

**22.** கோயில்களில் அர்த்தசாமப் பூசையின்போது நீலாம்பரி அல்லது நவரோஜ் இராகங்களில் சுத்தாங்கமாகப் பாடப்படும் பாடல்
(1) திருத்தெள்ளேணம் (2) திருவம்மானை (3) திருப்பொன்னூசல்
(4) திருச்சாழல் (5) திருப்பொற்சுண்ணம்

[பக். 3 ஐப் பார்க்க

**23.** ஹிந்துஸ்தான் பெஹாக் இராகத்தின் ஸ்ாநிநிதபா என்ற பிரயோகத்தில் வரும் நிஷாதங்கள் முறையே
(1) காகலி நிஷாதம், கைசிகி நிஷாதம் (2) கைசிகி நிஷாதம், சுத்த நிஷாதம்
(3) காகலி நிஷாதம், சுத்த நிஷாதம் (4) சுத்த நிஷாதம், கைசிகி நிஷாதம்
(5) கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம்

**24.** அக்பரின் சமஸ்தான வித்துவானாக விளங்கிய ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்
(1) பாத்கண்டே (2) தான்சேன் (3) அமிர்குஸ்ரு
(4) மொஹமட் கௌஸ் (5) கோபாலகிரி புவி

**25.** திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளிய இறைவன் மீது பாடப்பட்ட தேவாரம்
(1) உற்றுமை சேர்வது... (2) மாதர் மடப்பிடியும்...
(3) சலம் பூவொடு தூபம்... (4) ஆலந்தானுகந்து...
(5) அங்கமும் வேதமும்...

**26.** தம்புரா வாத்தியத்தில் இசை ஒலியைப் பெருக்கும் பாகம்
(1) தண்டி (2) பிருடைகள் (3) குதிரை (4) குடம் (5) மீட்டுத்தந்திகள்

**27.** ஹிந்துஸ்தான் காபி, கர்நாடக பெஹாக் ஆகிய இராகங்களது தாய் இராகங்களின் மேள எண்கள் முறையே
(1) 22, 28 (2) 22, 29 (3) 28, 22 (4) 28, 29 (5) 29, 29

**28.** இராஜ முத்திரையுடன் கூடிய விஜயராகவ பஞ்சரத்னம் என்னும் ஐந்து பதங்களை இயற்றியவர்
(1) முத்தையா பாகவதர் (2) கனம் கிருஷ்ணய்யர் (3) ஷேத்ரக்ஞர்
(4) பரிமளரங்கர் (5) ஸாரங்க பாணி

**29.** குறித்த சுருதியில் கீழ்ஸ்தானத்தில் இருந்துகொண்டே மேல்ஸ்தானத்தை எழுப்பும்போது உண்டாகும் கமகம்
(1) பிரத்தியாகதம் (2) ஆஹதம் (3) ஸ்புரிதம் (4) மூர்ச்சனை (5) டாலு

**30.** வயலின் வாத்தியத்தில் நாதத்தைக் குறைப்பதற்காகப் பொருத்தப்படும் பாகம்
(1) பாலம் (Bridge) (2) நாதக்குச்சி (Sound post)
(3) சுருதி சீராக்கி (String Adjustor) (4) ஒலியடக்கி (Mute)
(5) தந்தி தாங்கி (Tail piece)

**31.** கர்நாடக சங்கீதத்தை தன் கேள்வி ஞானம் மூலம் ஸிதார் வாத்தியத்தில் வாசித்த இசைக் கலைஞர்
(1) வீணை பாலச்சந்தர் (2) திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை
(3) லால்குடி ஜெயராமன் (4) மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர்
(5) குன்னக்குடி வைத்தியநாதன்

**32.** ஆந்திரப் பிரதேச 'ஆஸ்தான சங்கீத விதுஷமணி' கௌரவத்தை 1981 இல் பெற்ற இந்திய இசைக் கலைஞர்
(1) எம். எஸ். சுப்புலட்சுமி (2) எம். எல். வசந்தகுமாரி (3) டி. கே. பட்டம்மாள்
(4) வீணை தனம்மாள் (5) பாலசரஸ்வதி

**33.** தவில் வாத்தியத்திலுள்ள 'வெண்டயம்' என்னும் பகுதி
(1) ஆட்டுத்தோலால் ஆனது. (2) எருமைமாட்டுத் தோலால் ஆனது.
(3) பஞ்ச உலோகங்களால் ஆனது. (4) திருவாச்சி மரத்தாலானது.
(5) பலா மரத்தாலானது.

**34.** பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளை 'நலுவதிவேல ராகால பைடகால குருமூர்த்தி சாஸ்திரிகள்' எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைப்பதற்கான காரணம்
(1) குருமூர்த்தே எனும் முத்திரையைக் கொண்டிருந்தமை
(2) ஆயிரம் கீதங்களை இயற்றியிருந்தமை
(3) அபூர்வ ராகங்களில் பல உருப்படிகளை இயற்றியிருந்தமை
(4) கன, நய, தேசிய பாடுவதில் சிறந்திருந்தமை
(5) நாற்பதாயிரம் இராகங்களின் இலட்சணங்களை அறிந்திருந்தமை

**35.** தமது கச்சேரிகளில் பாரதியாரின் சுதந்திரப் பாடல்களைப் பாடிப் பிரபல்யமடையச் செய்த இந்திய இசைக் கலைஞர்
(1) பாலமுரளி கிருஷ்ணா (2) டி. கே. பட்டம்மாள்
(3) எம். எஸ். சுப்புலட்சுமி (4) செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயங்கார்
(5) அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்

**36.** வங்காளக் கலைஞரான ஸஹாப் அப்துல்லா கான் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வாத்தியம்
(1) ஸரோட் (2) ஸிதார் (3) தபேலா (4) முகவீணை (5) ஸாரங்கி

**37.** ஒலி அதிர்வின்போது குறித்த ஒரு கணத்தில் தோன்றும் குறுக்கலையின் மிக உயர்ந்த இடம்
(1) முழு அலை (2) தாழி (3) மீடிறன் (4) முடி (5) உரப்பு

[பக். 4 ஐப் பார்க்க

**38.** 'ஜலஜாக்ஷி' என்னும் ஹம்சத்வனி இராக ஆதிதாள வர்ணத்தில் நிபகரி நிகரி நிபநிப ஸநிரிஸகl என்னும் ஸ்வரப் பகுதியைத் தொடர்ந்து வரும் ஸ்வரப் பகுதி

(1) ரீநிகரிநி ஸரி । பநிஸரி கா , ப ॥ (2) , கரிநி ப நிஸரி । , ரிகநி ஸரிகப ॥

(3) பநிஸ்ரீக் நிஸ் । நிக்ரிரி நீபநி ॥ (4) ரிபகநி பஸ்நிரி । நிக்ரிநி ரிநிபக ॥

(5) பாநிஸா ரிக்ரி । பநிஸ்ரி க்ரிநிரி ॥

**39.** மொத்த அட்சரங்கள் பதினொன்றாக வரும் தாளங்கள்

(1) மிஸ்ரஜாதி ரூபகதாளம், கண்டஜாதி திரிபுடைதாளம், சங்கீரணஜாதி ஏகதாளம்
(2) திஸ்ரஜாதி மட்டியதாளம், கண்டஜாதி ஜம்பைதாளம், சதுஸ்ரஜாதி திரிபுடைதாளம்
(3) கண்டஜாதி மட்டியதாளம், சங்கீரணஜாதி ஜம்பைதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம்
(4) சதுஸ்ரஜாதி மட்டியதாளம், மிஸ்ரஜாதி ஜம்பைதாளம், திஸ்ரஜாதி அடதாளம்
(5) திஸ்ரஜாதி துருவதாளம், சங்கீரணஜாதி ரூபகதாளம், மிஸ்ரஜாதி திரிபுடைதாளம்

**40.** பா, தபமரி க*ரிஸ என்னும் ஸ்வர ஸஞ்சாரத்திற்கு பொருத்தமாக வரும் இராகம்

(1) பிலஹரி (2) கல்யாணி (3) பைரவி
(4) அஸாவேரி (5) ஸாரங்கா

**41.** திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை அவர்கள் நடிகராகத் தோன்றி நடித்த திரைப்படம்

(1) பக்த குசேலர் (2) பக்த பிரகலாதன் (3) கவிகாளமேகம்
(4) அருணகிரிநாதர் (5) திருமால் பெருமை

**42.** ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட நூல்

(1) சங்கீத மகரந்தம் (2) சங்கீத ரத்னாகரம் (3) ஸ்வரமேள கலாநிதி
(4) சங்கீத சமயசாரம் (5) சங்கீத சுதாகரம்

**43.** மேலைத்தேய இசையின் சாஸ்திர ரீதியான வாசிப்பு முறையை வாசிக்கக்கூடிய கிற்றார் வகை

(1) லீட் கிற்றார் (2) பேஸ் கிற்றார் (3) ரிதம் கிற்றார்
(4) பொக்ஸ் கிற்றார் (5) ஸ்பானிஷ் கிற்றார்

**44.** கர்நாடக இசையில் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆரம்ப பயிற்சி வரிசைகள் கற்பிக்கப்படுவதுபோல ஹிந்துஸ்தானி இசையில் கற்பிக்கப்படும் இராகம்

(1) மார்வா (2) பிலாவல் (3) காபி (4) யமன் (5) பூர்வி

**45.** இலங்கை இசைக்கலைஞரான என். எஸ். உருத்திராபதி அவர்கள் இறைபதம் அடைந்த ஆண்டு

(1) 1980 (2) 1981 (3) 1984 (4) 1988 (5) 1990

**46.** ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முதன்முறையாக 'ஸ்டாவ் நொட்டேஷன் (Staff Notation)' முறையில் எழுதியவர்

(1) சரபோஜி மஹாராஜா (2) டாக்டர். ராஜா சேர் சுரேந்திர மோஹன டாகூர்
(3) பார்டோலோமியா கிறிஸ்டோவோரி (4) கொட்லொப் நீவ்
(5) லுட்விக் வான் பீத்தோவன்

**47.** சங்கீரண கதிபேதம் அடையும்போது 117 மொத்த அட்சரங்களை எடுத்துக்கொள்ளும் முப்பத்தைந்து தாளங்களுள் ஒன்று

(1) சங்கீரண ஜாதி திரிபுடைதாளம் (2) மிஸ்ர ஜாதி ஜம்பைதாளம்
(3) சங்கீரண ஜாதி மட்டியதாளம் (4) கண்டஜாதி துருவதாளம்
(5) சங்கீரண ஜாதி ரூபகதாளம்

**48.** நிந்தாஸ்துதிப் பாடல்களை இயற்றிப் பிரபல்யமடைந்த வாக்கேயகாரர்

(1) ஷேத்ரக்ஞர் (2) ஜெயதேவர் (3) கனம் கிருஷ்ணய்யர்
(4) மாரிமுத்தாப்பிள்ளை (5) முத்துத்தாண்டவர்

**49.** சுரதாளக் குறிப்புடன் எழுதப்பட்ட ஊத்துக்காடு வேங்கட சுப்பையரது பாடல்கள் அடங்கியுள்ள நூல்

(1) அஷ்டபதி (2) கிருஷ்ண பக்திப் பாமாலை (3) கீர்த்தனமாலா
(4) மாதவ கீதங்கள் (5) கிருஷ்ண கானம்

**50.** கனம் கிருஷ்ணய்யர், தன்னை ஆதரித்த தருமவானாகிய இராமபத்திர மூப்பனாரின் குணவியல்புகளைப் பற்றி பாராட்டிப் பாடிய பாடல்கள்

(1) ஏற்ற கைக்கெல்லாம் கொடுக்கும், வேலவரே
(2) நல்ல நல்ல நிலவு, மாதே அவர் செய்த வஞ்சனை
(3) மாதே அவர் செய்த வஞ்சனை, அன்னமே என் செய்வேன்
(4) அன்னமே என் செய்வேன், காத்தருள்வாய்
(5) வேலவரே, கருணை செய்குவாய்

***

2872

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

09.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 72 மேளகர்த்தா சக்கரத்தில் பிரதிமத்யம இராகங்களை உள்ளடக்கிய சக்கரங்களின் பெயர்களை முறையே எழுதுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட சக்கரங்களுள் வரும் விவாதி மேளங்களின் மேள எண்களையும் அதற்குரிய இராகங்களையும் தருக.

(iii) 45, 51, 58, 63 ஆகிய மேள எண்களுக்குரிய இராகங்களின் பெயர்களையும் அவற்றின் சங்கேத அட்சரங்களையும் தருக.

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட நான்கு மேள எண்களுக்குரிய இராகங்களுள் விரும்பிய **மூன்றினது** ஸ்வரஸ்தானங்களைத் தருக.

**2.** கீழே தரப்பட்டுள்ள இசை உருப்படிகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.

(i) திருப்புகழ்

(ii) தரு

(iii) அஷ்டபதி

**3.** (i) தாள தசப் பிராணங்களின் பெயர்களைத் தருக.

(ii) அவற்றுள் **ஐந்தினைப்** பற்றி விரிவாகத் தருக.

## பகுதி II

**4.** பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)

(i) மபதஸ்நிதா - பதஸ்ரிஸா - நிதபமாகரிஸ என்னும் சஞ்சாரத்திற்குப் பொருத்தமான 15ஆவது மேளத்தின் ஜன்னியம்

(ii) ஹிந்துஸ்தான் பெஹாக்

(iii) மேலைத்தேய இசையில் ஹார்மோனிக் மைனர் ஸ்கேல் எனப்படும் இராகம்

(iv) ஹமீர் கல்யாணி

[பக். 2 ஐப் பார்க்க

**5.** (i) மைசூர் வாசுதேவாச்சாரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைக் கல்வியினையும் விரிவாகத் தருக.

(ii) அவர் பெற்ற பட்டங்கள் அல்லது விருதுகள் **மூன்றினைத்** தருக.

(iii) அவர் இயற்றிய பிரபல்யமான உருப்படிகள் **நான்கு** தருக.

(iv) அவர் கர்நாடக இசைக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

**6.** (i) மிருதங்கம் வாசிப்பதில் பிரபல்யமான இந்தியக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(ii) மிருதங்க வாத்தியத்தின் சிறப்பியல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறித்துக் காட்டுக.

(iv) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விரிவாக விளக்குக.

(v) இவ்வாத்தியத்தினை சுருதி சேர்க்கும் முறையினையும் வாசிக்கும் முறையினையும் விளக்குக.

**7.** (i) தேவாரம் என்பதன் பொருள் யாது ?

(ii) தேவார முதலிகள் ஒவ்வொருவரினதும் தேவாரங்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள் ஒவ்வொன்று தருக.

(iii) சம்பந்தர் பாடிய தேவாரங்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு, கர்நாடக இசை வரலாற்றில் அவற்றின் செல்வாக்கினையும் ஆராய்க.

(iv) சம்பந்தர் கையாண்ட பண்களில் **பத்துப்** பண்களையும் அப்பண்களுக்குரிய தேவாரங்கள் ஒவ்வொன்றினையும் குறிப்பிடுக.

**8.** தான்சேன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவர் ஹிந்துஸ்தானி இசைக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

**அல்லது**

பீத்தோவன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு அவர் மேலைத்தேய இசைக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

❊ ❊ ❊